**செய்தி வெளியீடு எண்: 80** **நாள்:30/01/2013**

## மாநில தொழிலாளர் ஆலோசனை வாரிய 67–வது கூட்டம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.த.செல்லபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

மாநில தொழிலாளர் ஆலோசனை வாரிய 67–வது கூட்டம் 30.1.2013 இன்று சென்னை, தேனாம்பேட்டை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கட்டிடத்தில் உள்ள மாநாட்டு கூட்டத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு.சி.த.செல்லபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசுத் தரப்பில் திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, டாக்டர். ப. சந்திரமோகன், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர், திரு.க.அய்யனு, தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உள்ளிட்ட அரசு அலுவலர்களும், இவ்வாலோசனை வாரியத்தின் உறுப்பினரும் சட்டமன்ற உறுப்பினருமான திருமதி முத்துசெல்வி ஆகியோரும், நிர்வாகத் தரப்பு மற்றும் தொழிற்சங்கத் தரப்பு பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தலைமை வகித்து பேசுகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தொழிலாளர்கள் வாழ்வில் நல்ல வளம் பெற வேண்டும் நல்ல வாழ்க்கை அவர்களுக்கு அமைத்து கொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு எண்ணற்ற திட்டங்களை வகுத்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். இக்கூட்டத்தில் தொழிற்சங்க பிரதிநிதிகள் தொழில் அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களுடைய ஆலோசனைகளை வழங்கியுள்ளீர்கள் நீங்கள் தெரிவித்த ஆலோசனைகளை மனதில் கொண்டு எதிர்வரும் காலத்தில் இன்னும் சிறப்பாக இத்துறை செயல்படும். கடந்த ஆட்சி காலத்தில் ஐந்து வருடத்தில் ரூ.318 கோடி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று 1.3/4 வருட காலத்தில் ரூ.179 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தொழிலாளர் நலத்துறையில் குறிப்பிட்ட அளவில் அலுவலர்கள் பணியிடங்கள் தற்போது நிரப்பப்பட்டுள்ளது. இதுபோன்று எண்ணற்ற பணியிடங்கள் ஆனாலும் சரி கட்டிடங்கள் ஆனாலும் சரி எல்லாவற்றையும் செய்து கொடுக்கக்கூடிய முதலமைச்சராக மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். பஞ்சாலைகளில் இளம் பெண்கள் பணியில் அமர்த்தப்படுகிறார்கள் அப்படி அமர்த்தப்படும் போது அவர்களுடைய நலன்கள் பாதுகாக்கின்ற வகையில் தொழிலாளர் நலத்துறையினர் பணிமேற்கொள்ள வேண்டும் சட்டமீறல்கள் இருந்தால் சம்மந்தப்பட்ட பஞ்சாலை மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

வெளி மாநிலத் தொழிலாளர்கள் தமிழகத்தில் அதிக அளவில் பணிபுரிவதால் அவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் விதத்தில் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் சட்டத்தை சீரிய முறையில் அமல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

உடல் உழைப்பு தொழிலாளர் நல வாரியங்களில் மேலும் ஒரு லட்சம் பதிவு பெற்ற தொழிலாளர்கள் கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து ஊனம் மற்றும் விபத்து மரணம் ஆகிய நலத் திட்ட உதவிகள் பெறும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தற்போது ரூ.22.00 கோடி வழங்கியுள்ளார்கள் என மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் தொழிற்சங்கங்கள் சட்டம், தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் சட்டம் (தொழிலாளர்களுக்கு பணி நிரந்தரம் வழங்கல்) ஆகிய சட்டங்களின் கீழான விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்வது குறித்தும், பஞ்சாலைகளில் இளம் பெண்களை பணியமர்த்துவது மற்றும் பாதுகாப்பது குறித்தும், தமிழகத்தில் வெளிமாநிலத் தொழிலாளர்கள் அதிக அளவில் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருவதால் புலம் பெயர்ந்த தொழிலாளர் சட்டத்தை சிறப்பான முறையில் அமலாக்குவது உள்ளிட்ட தொழிலாளர்கள் நலன் தொடர்பான பொருட்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேலும், தமிழ்நாடு தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல் சட்டம் மற்றும் தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்குதல் சட்டம் ஆகியவற்றின் கீழ் மாதம் ரூ.3,500/–க்கு மேல் ஊதியம் பெறும் சூப்பர்வைசர்கள் தற்போது உள்ள சட்டப் பிரிவின்படி தொழிலாளி என்ற வரையறைக்குள் வரமாட்டார்கள். இத்தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.3,500/– என்ற ஊதிய வரம்பை ரூ.15,000/– ஆக உயர்த்த சட்ட திருத்தம் மேற்கொள்ளலாம் என்று அரசுக்கு பரிந்துரை செய்ய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

உறுப்பினர்களின் கருத்துக்களின் அடிப்படையில் இக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

**********

**வெளியீடு**
செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை–9.